**மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்**
**පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත්**
**PROVINCIAL DEPARTMENT OF EDUCATION, NORTHERN PROVINCE**

# தமிழ்மொழியும் இலக்கியமும்
## சுயகற்றல் கையேடு
## தரம் - 08

இக் கையேடு தரம் 8 மாணவர்களுக்குரியது இக் கையேடு இரண்டாம் தவணைக்குரிய ஏழு அலகுகளையும் இலக்கணப்பகுதியையும் பகுதி 1 வினாக்களுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டுள்ளது.

**இரண்டாம் தவணைக்குரிய அலகுகள்**

1. பசிப்பிணிமருந்து
2. ஆக்கிமிடிசு
3. நாடகமேஉலகம்
4. சொல்லின் இசை
5. சுதந்திரகீதம்
6. பாலித்திடவேண்டும்
7. உயிர் இரக்கம்

இவ் அலகுகளை ஒவ்வொன்றாக நன்குவாசித்த பின்னர் இப்பயிற்சிகளை அலகுரீதியாகச் செய்யவும்.

### அலகு 08
### பசிப்பிணி மருந்து

1. ''பசிப்பிணிதீர்த்தபாவை'' என்னும் பட்டம் பெற்றவர் யார்?
2. காயசண்டிகை எதனால் துன்புற்றிருந்தாள்?
3. அரசனுடைய முக்கிய மூன்று கடமைகளில் முன்னிற்பது எதுவெனக் கூறப்படுகிறது?
4. பசியைப் பிணிஎனத் திட்டவட்டமாகக் கூறியவர் யார்?
5. மதுரையில் மாசற்ற மனைகளில் பிச்சை எடுத்தவன் யார்?
6. உதயகுமாரனுக்குப் பயந்து மணிமேகலை யாருடைய உருவெடுத்து சிறைச் சாலையில் உணவளித்தாள்?
7. தீவதிலகையின் வேட்கை யாது?
8. ஆபுத்திரனின் கனவில் தோன்றியவர் யார்?
9. கலையைக் காசாக்காமல் துறவு பூண்டு அருள்வழிச் சென்றவள் யார்?
10. ''அன்பா எழுந்திரு இதைக் கொள். இது அற்புதத் திருவோடு நாடு வறண்டாலும் இந்த ஓடு வறளாது -----------''இக் கூற்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

- **ஒத்த பதங்களை இணைக்குக**

| | |
|---|---|
| 1. மானிடர் | உணவு |
| 2. ஜீவராசிகள் | பாத்திரம் |
| 3. உண்டி | மனிதர் |
| 4. பிணி | சோறு |
| 5. கலயம் | உயிரினங்கள் |
| 6. திப்பியம் | தீராநோய் |
| 7. அன்னம் | சுவர்க்கம் |
| 8. ஞாலம் | குழந்தை |
| 9. சேய் | விருப்பம் |
| 10. வேட்கை | உலகம் |
| 11. விழுப்பம் | மேன்மை |

## எதிர்ச்சொல் தருக.

1. இயற்கை–
2. உண்மை -
3. புகழ் -
4. வரவு–
5. நீதி -

## <u>வினைச்சொற்கள்</u>

முற்றுவினை:-

பால் காட்டும் முற்றுவிகுதிகளைக் கொண்டுள்ள வினைச் சொற்கள் முற்று வினைகள் அல்லது வினைமுற்றுக்கள் எனப்படும்.
உதாரணம்:-
பாடினான் -ஆன்
எழுதுகின்றான் -ஆன்
பாடுவாள் -ஆள்

எச்சவினை:-
பால் காட்டும் முற்றுவிகுதியைக் கொண்டிருக்காத முற்றுப் பெறாத குறைவினைகள் எச்சவினைகள் எனப்படும்.
உதாரணம்:- அழுத பிள்ளை
எழுதி முடித்தான்
இங்கு அழுத, எழுதி என்பன பால்காட்டும் முற்று விகுதிகளைக் கொண்டிருக்கவில்லை.
எச்ச வினை இரண்டு வகைப்படும்
1.பெயரெச்சம்
2.வினையெச்சம்

1.பெயரெச்சம்

பெயர்ச் சொல்லை முடிக்கும் சொல்லாய்க் கொண்ட எச்சவினை பெயரெச்சம் எனப்படும்
உ-ம் :- படித்த பெண்

2.வினையெச்சம்

வினைச் சொல்லை முடிக்கும் சொல்லாய்க் கொண்ட எச்சவினை வினையெச்சம் எனப்படும். இது செய்து, செய்ய, செய்தால் போன்ற அமைப்பில் வரும்.
உ-ம் :- படித்து முடித்தான்
படிக்கப் வேண்டும்

- **பயிற்சி**

**பின்வரும் வினைச்சொற்கள் முற்றுவினையா? பெயரெச்சமா? வினையெச்சமா? எனக் குறிப்பிடுக.**

1. படித்தான் -
2. எழுதிய -
3. கதைத்து -
4. பாடினாள் -
5. மலர்ந்த -
6. செய்து -
7. ஓடிய -
8. விளையாடினான் -
9. உண்ட -
10. அருந்தி -

**பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களில் கட்டுரைஎழுதுக.**

1. நான் ஆசிரியரானால்
2. உடைந்தகதிரையின் சுயசரிதை
3. தொற்றிவரும் நோயும் அதனதுஅபாயமும்
4. நான் விரும்பும் பெரியார்

## அலகு 09

## ஆக்கிமிடீசு

1. ஆக்கிமிடீசு என்ற கவிதையைப் பாடியவர் யார்?
2. கியூஸ் நாட்டு அரசன் யார்?
3. மன்னன் பொற் கொல்லனுக்கு கொடுத்த வேலை என்ன?
4. ஆக்கிமிடீசு கண்டுபிடித்த விஞ்ஞானத் தத்துவம் யாது?
5. இக் கவிதையில் இடம்பெறும் பாத்திரங்கள் எவை?

- **கீழே தரப்பட்ட சொற்களுக்குப் பொருத்தமான எதிர்க்கருத்து சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. ஆக்கம் (அழிதல், கேடு, உருவாக்கம்)
2. மருள் (தெருள், அருள், வரம்)
3. பூரணம் (முழுமை, அபூரணம், பௌர்ணமி)
4. ஐயம் (சந்தேகம், பிச்சை, துணிபு)
5. பாலர் (சிறுவர், விருத்தர், பெரியோர்)
6. தமர் (பிறர், உறவினர், சுற்றம்)
7. இரகசியம் (அமைதி. அடக்கம், பரகசியம்)
8. நல்லது (சிறந்தது, கெட்டது, புதியது)
9. இகழ் (புகழ், இகழ்தல், வாழ்த்தல்)
10. காலம் (நேரம், வேளை, அகாலம்)

## வினைச்சொற்கள்

ஏவல்வினை:-

முன்னிலையில் இருப்போரை வினையை நிகழ்த்துமாறு அல்லது நிகழ்த்தாது இருக்குமாறு ஏவுவதற்குப் பயன்படுத்தப்படும் வினைச்சொல்லை ஏவல்வினை என்பர்.

இது
1. ஏவல் ஒருமைவினை
2. ஏவல் பன்மைவினைஎன இரு வகைப்படும்.

ஏவல் ஒருமைவினை:- வா, இரு, எடு, நட, போகாதே, படிநில்லாதே
ஏவல் பன்மைவினை- போங்கள், வாருங்கள், செய்யாதீர்கள், எழுதுங்கள் இவை வினையடியுடன் ஏவல் பன்மைவிகுதிகளைக் கொண்டுஅமைகின்றன.
உதாரணம்:-
போங்கள் - போ + ங்கள்
எடுங்கள் - எடு + ங்கள்

## பயிற்சி

**பின்வரும் வினைகள் ஏவல்வினையா? முற்றுவினையா? எச்சவினையா? எனக் குறிப்பிடுக.**

உதாரணம்:- படி – ஏவல் வினை

1. படித்தான் -
2. எழுதினான் -
3. எழுதி -
4. நடந்தாள் -
5. படித்து -
6. வந்த -
7. ஓடு -
8. செய்யாதே -
9. வா -
10. வந்து -

வியங்கோள் வினை :

வியங்கோள் வினைகள் வினையடியுடன் க, இய, இயர் ஆகிய விகுதிகளைப் பெற்றுவரும். இவை வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் போன்ற பொருளில் வரும்.

உதாரணம்:- வாழ்த்தல் - வாழ்க, வாழிய, வாழியர்
வைதல் - அழிக, கெடுக
விதித்தல் - எழுதுக
வேண்டல் - தருக, அருள்க

இவ்வினைகள் ஐம்பால் மூவிடத்துக்கும் பொதுவாகவரும்

அட்டும் என்னும் வியங்கோள் விகுதி தற்காலத் தமிழில் பயன்பட்டு வருகின்றது.

உதாரணம்:-வாழட்டும், அழியட்டும்

- **பயிற்சி**

**பின்வரும் வினாக்களுக்குரிய மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1. பெயரெச்சமாக அமைவது
   1.படித்தான் 2.உண்பாய் 3.வந்த 4.எழுதி
2. கமலன் பாடிமுடித்தான். இங்கு பாடி என்பது
   1.வினைமுற்று 2.ஏவல் வினை 3.வியங்கோள் வினை 4.வினையெச்சம்
3. அறிவில் நீ முன்னேறுக.என்பது
   1.வியங்கோள்வினை 2.எச்சவினை 3.முற்றுவினை 4.குறிப்புவினை
4. தற்காலத்தில் அட்டும் என்னும் வியங்கோள் விகுதிபயன்படும் வினை
   1.ஏவல் வினை 2.குறிப்புவினை 3.வியங்கோள் வினை 4.எச்சவினை)
5. ஆசிரியர் பாடம் கற்பித்தார் என்பது
   1.முற்றுவினை 2.ஏவல் வினை 3.எச்சவினை 4.வியங்கோள் வினை

**<u>ஆண்டு நிறைவு விழாக்கள்</u>**

1. முதலாம் வருட நிறைவு விழா - காகிதவிழா
2. இரண்டாம் வருட நிறைவு விழா - பருத்திவிழா
3. பத்து வருட நிறைவு விழா - தசாப்தவிழா
4. பதினைந்தாவது ஆண்டு நிறைவுவிழா - பளிங்குவிழா
5. இருபதாவதுஆண்டுநிறைவுவிழா - பீங்கான் விழா
6. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - வெள்ளிவிழா
7. முப்பதாவது ஆண்டு நிறைவுவிழா - முத்துவிழா
8. நாற்பதாவது ஆண்டு நிறைவுவிழா - மாணிக்கவிழா

9. ஐம்பதாவது ஆண்டு நிறைவுவிழா - பொன் விழா
10. அறுபதாவதுஆண்டு நிறைவுவிழா - வைரவிழா, மணிவிழா
11. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவுவிழா - பவளவிழா
12. எண்பதாவது ஆண்டு நிறைவுவிழா - அமுதவிழா
13. நூறாவது ஆண்டு நிறைவுவிழா - நூற்றாண்டுவிழா

## அலகு 10
## நாடகமே உலகம்

1. இந்த உலகம் ஒரு நாடகசாலை என்று கூறியஅறிஞர் யார்?
2. நாடகம் என்பது யாது?
3. நாடகமே உலகம் என்னும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
4. "நாடகம் பாமரமக்களின் பல்கலைக்கழகம்" என்று கூறியபெரியார் யார்?
5. நடிப்பின் முக்கியத்துவம் பற்றிக் கட்டுரையாசிரியர் குறிப்பிடும் விடயம் யாது?

**அரும்பதங்களை இணைக்குக.**

| | |
|---|---|
| 1. ஈவது | முடிசூட்டுவிழா |
| 2. பட்டாபிஷேகம் | நெகிழ்வு |
| 3. குழைவு | அரிது |
| 4. அபூர்வம் | சந்தேகம் |
| 5. ஐயம் | கொடுப்பது |
| 6. நண்ணும் | ஆச்சரியம் |
| 7. அதிசயம் | பிரசங்கம் செய்பவர் |
| 8. பிரசங்கி | கிட்டும் |

## சொற்றொடரும் வாக்கியமும்

சொற்கள் குறிப்பிட்ட ஒழுங்கு முறைக் கேற்ப அமைப்புரீதியாக இணைந்து முற்றுப் பொருளைத் தருமாயின் அது வாக்கியம் எனப்படும்.

உதாரணம்:- நீலவானம் அழகாகக் காட்சியளிக்கின்றது. இவ் வாக்கியத்தில் இடம் பெற்ற சொற்களான

1. நீலம்
2. வானம்
3. அழகாக
4. காட்சியளிக்கின்றது

இவற்றை வாக்கிய உறுப்புக்கள் என்போம்.

நீலவானம்
அழகாகக் காட்சியளிக்கின்றது.

இவ்வாறான வாக்கிய உறுப்புக்களைச் "சொற்றொடர்"என்போம்.

**பெயர்த் தொடர்**

நீலவானம்

இங்கே வானம் என்பது பெயர்ச் சொல்லாகும். பெயர்ச் சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடரைப் பெயர்த்தொடர் என்போம்.

இங்கே நீல வானம்

வானம் என்பது பெயர்த் தொடர் ஆகும்

**வினைத் தொடர்**

அழகாகக் காட்சியளிக்கின்றது

வினைச் சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடரை வினைத் தொடர் என்பர்.
காட்சியளிக்கின்றது
அழகாகக் காட்சியளிக்கின்றது என்பது வினைத் தொடர்களர் ஆகும்

**பயிற்சி**

## பின்வரும் வாக்கியங்களில் இடம்பெற்றது பெயர்த் தொடரா? வினைத் தொடரா? என இனங்கண்டு கீழ்வரும் அட்டவணையை நிரப்புக.

1. குமரன் விரைவாக எழுதினான்.
2. பல வர்ணப் பட்டங்கள் வானில் பறக்கின்றன.
3. பாலன் மெல்லப் பேசினான்.
4. அழகிய சிறுவர்கள் விளையாடி மகிழ்ந்தனர்.
5. மாலா அழகாக வரைவாள்.

| இல | பெயர்த் தொடர் | வினைத் தொடர் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |

**பயிற்சி**

## கீழ்வரும் பழமொழிகளில் இடம்பெற வேண்டிய சரியான எழுத்தை எழுதுக.

1. அ-----வுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
2. அணை கடந்தவெ-----ளம் அழுதாலும் வராது.
3. ஆ------க்கும் அடி சறுக்கும்.
4. இ-----மையிற் க-----விசி------மேல் எழுத்து
5. அ-----த பிள்ளை பா----- குடிக்கும்
6. கூ------னாலும் கு------த்துக் குடி
7. எலி வ-------யானாலும் தனி வ--------வேண்டும்.
8. கே-----விச் செவியன் குடியைக் கெடுத்தான்
9. து-------ளிய மாடு பொதி சுமக்கும்
10. ஆ------ம் அறியாமல் கா------- விடாதே.

## பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமைக்குக.

1. அலை:-
2. அழை:-
3. அளை:-
4. சூல்:-
5. சூள்:
6. சூழ்:-

## கடிதம்

- **உங்கள் பிரதேசத்தின் சிறப்புக்களை விபரித்து அவற்றைப் பார்வையிட வருமாறு அழைத்து உமது நண்பருக்குக் கடிதம் எழுதுக.**
(75 சொற்கள்)

## அலகு 12
## சுதந்திர கீதம்

I **சுதந்திர கீதம் என்ற பாடத்தை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சுதந்திர கீதம் என்ற பாடலில் சிறப்பிக்கப்படும் நாடு எது?
…………………………………………………………………………………………
2. இந்நாட்டில் செழித்து வளரும் பயிர்கள் எவை?
…………………………………………………………………………………………
3. இலங்கையை ஆட்சி செய்த வெளிநாட்டவர் யார்?
…………………………………………………………………………………………
4. இலங்கை எத்தனையாம் ஆண்டு அந்நியராட்சியிலிருந்து விடுபட்டு சுதந்திரமடைந்தது?
………………………………………………………………………………………
5. இப்பாடலில் குறிப்பிடப்படும் சுதந்திரவீரர்கள் யாவர்?
…………………………………………………………………………………………
6. இலங்கை மணித்திரு நாட்டில் காணப்படும் வளங்கள் எவை எனக் கூறப்பட்டுள்ளன?
…………………………………………………………………………………………
7. இலங்கையில் வாழும் பல்லின மக்கள் யாவர்?
…………………………………………………………………………………………
8. இப்பாடலில் காணப்படும் உவமை அணிகளையும் உருவக அணிகளையும் குறிப்பிடுக.?
…………………………………………………………………………………………
9. இலங்கைத் திருநாடு எவ்வாறு திகழ வேண்டும் என கவிஞர் விரும்புகிறார்?
…………………………………………………………………………………………
10. இப்பாடலில் கூறப்படும் விழுமியக் கருத்துக்கள் எவை?
…………………………………………………………………………………………

II. **பின்வரும் சொற்களுக்கு பொருத்தமான ஒத்த பதங்களைத் பாடலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

1. தாய் -
2. தேசம் -
3. நட்பு -
4. பூங்கா -
5. கதிரவன் -
6. மகன் -
7. வணக்கம் -
8. கிழக்குத் திசை -
9. கொடை -
10. பூமி -

III **பின்வரும் சொற்களுக்குரிய எதிர்ப்பதங்களை இணையுங்கள்**

| | |
|---|---|
| 1. சண்டை | குடதிசை |
| 2. தோழமை | குழி |
| 3. நாடு | சமாதானம் |
| 4. குணதிசை | காடு |
| 5. குன்று | பகைமை |

- **வாக்கிய இயைபு**

வாக்கியத்தின் பொருள் தெளிவாக உணர்த்தப்படுவதற்கு, அவ்வாக்கியத்திலுள்ள எழுவாயும் பயனிலையும், திணை, பால,எண், இடம் என்பவற்றால் மறுபடாது நிற்பது அவசியமாகும். அதாவது எழுவாய்க்குப் பொருத்தமுற பயனிலை அமைதல் வேண்டும். அவ்வாறு அமையாவிடின் அது வழுவான (தவறான) வாக்கியமாக அமைந்துவிடும்.

உ+ம் யானைகள் கூட்டங் கூட்டமாய் அவ்விடத்தில் நிற்கிறது.

இது ஒரு வழுநிலை வாக்கியமாகும் . ''யானைகள்'' என்ற எழுவாய்க்கு இயைபாக ''நிற்கிறது'' என்ற பயனிலை அமையவில்லை.

''யானைகள் கூட்டங் கூட்டமாய் அவ்விடத்தில் நிற்கின்றன'' என்பதே பொருத்தமான வாக்கியம் ஆகும்.

**1. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதுக.**

1. கமலாவும் விமலாவும் நடனம் ………………………….. (ஆடு)
2. நானும் தம்பியும் பந்து …………………………….... (விளையாடு)
3. வேடன் நாயுடன் காட்டிற்குச் …………………………… (செல்)
4. செந்நிறப் பூக்கள் அழகாக ……………………………… (காட்சியளி)
5. மான் கூட்டம் ஆற்றில் நீர் ……………………………… (அருந்து)

**2. அடைப்புக்குறிக்குள் உள்ள பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வழுவற்ற வாக்கியமாக எழுதுக.**

1. (கிளி / கிளிகள்) மரத்திலிருந்த பழங்களை கொத்தித் தின்றன.
2. (மாணவன் / மாணவர்கள்) மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்.
3. (நான் / நாம் ) பெரியோரைக் கனம் பண்ணுவோம்.
4. எமது கிராமத்தில் பச்சைப் பசேலென (வயல் / வயல்கள்) காட்சியளித்தது.
5. சோழ மன்னர்கள் ஆலயத்திற்குத் தேவையான பண உதவிகளை செய்து (கொடுத்தான் / கொடுத்தார்கள்)

## அலகு 13
## பாலித்திடவேண்டுமம்மா

**I .''பாலித்திட வேண்டுமம்மா'' என்ற சிறுகதையை வாசித்துப்- பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. ''பாலித்திட வேண்டுமம்மா'' என்ற சிறுகதையை எழுதியவர் யார்?
   ……………………………………………………………………………………
2. இச்சிறுகதை எச்சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது?
   ……………………………………………………………………………………
3. இச்சிறுகதையில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் யாவர்?
   ……………………………………………………………………………………
4. சேந்தனின் தந்தை எத்துறையில் ஈடுபாடுடையவர்?
   ……………………………………………………………………………………
5. சேந்தனின் நண்பன் யார்?
   ……………………………………………………………………………………
6. சேந்தனின் சோர்வுக்குக் காரணம் யாது?
   ……………………………………………………………………………………

7. மனச்சோர்வுற்றிருந்த சேந்தனின் நடத்தைகள் கதையில் எவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளன?

……………………………………………………………………………………………

8. சேந்தன், மயூரன் ஆகியோரது நட்பு எத்தகையது?

……………………………………………………………………………………………

9. இச்சிறுகதையில் சிறந்த உளவள ஆலோசகர் தாயா? தந்தையா? அதற்கான காரணம் யாது?

……………………………………………………………………………………………

10. இச்சிறுகதையில் வெளிப்படுத்தப்படும் விழுமியக் கருத்துக்கள் யாவை?

……………………………………………………………………………………………

## II பின்வரும் கூற்றுக்கள் யாரால்,யாருக்குக் கூறப்பட்டவை? எனக் குறிப்பிடுக.

1. “ஏன் அப்பன் லீவு விட்டதுக்குப் பஞ்சியாயிருக்கே”

   ……………………… ……………………………..

2. “என்ரை பிள்ளையிலை ஒன்றும் சோதிக்க வேண்டாம். என்ரை பிள்ளையை நான் கவனிச்சுக்கொள்ளுவேன்”

   ………………………. ……………………………..

3. “இன்ரேவல் நேரம் …… நானும் மயூரனும் ஒளிச்சு விளையாடிக் கொண்டிருந்தனாங்கள்”

   ……………………… …………………………

4. “சேந்தன் என்ன யோசனை”?

   ……………………… ………………………………..

5. “என்னவாக இருக்கும்? சேந்தனைக் கவனிக்காமல் இவள் என்ன செய்கிறாள்?

   ………………………. …………………………….

## III அரும்பதங்கள் தருக.

1. சோர்வு :-
2. பிரயாணம் :-
3. வரம்பு :-
4. கரிசனை :-
5. சம்பந்தம் :-
6. கவலை :-
7. அசண்டை :-
8. பரிகாரம் :-
9. பாலித்தல் :-
10. வெம்பினான் :-

## IV பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களுக்குரிய எழுத்து வழக்குச் சொற்களைத் தருக.

**பேச்சு வழக்கு** **எழுத்து வழக்கு**

1. கவனிச்சன்
2. என்னெண்டு
3. என்ரை பிள்ளை
4. குறைஞ்சு போச்சே
5. வாற வெள்ளிக்கிழமை
6. பொங்குவம்
7. அவனிட்டை
8. வெடிச்சுப் போச்சம்மா
9. செய்யேல்லை
10. கேட்டனான்

**இணைப்பிடைச் சொற்கள்**

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வாக்கியங்களை இணைப்பதற்குப் பயன்படும் சொற்கள் இணைப்பிடைச் சொற்கள் எனப்படும். தமிழில் பல வகையான இணைப்பிடைச் சொற்கள் உள்ளன.

(உ - ம்) அல்லது, ஆகவே, எனினும், எனவே, என்றாலும், ஆனால் , அத்துடன்

## 1. பொருத்தமான இணைப்பிடைச் சொற்களைப்பயன்படுத்தி இடைவெளி நிரப்புக.

1. கடும்மழை பெய்தது. ……………………… குளம் நிரம்பவில்லை.
2. இந்தியாவில் வெப்பம் நிலவியது. ………………. பல சிறுவர்கள் இறந்தனர்.
3. மருந்தே ……………………… விருந்தோடு உண்.
4. செந்தூரன் தினமும் உடற் பயிற்சி செய்பவன் …………………….. அவன் ஆரோக்கியமாக இருக்கின்றான்.
5. விளையாட்டுக்கள் சிறந்த பொழுது போக்காகும். ……………………. நாள் முழுதும் விளையாடுவது நல்லதல்ல.

## II கீழே தரப்பட்டுள்ள வாக்கியச்சோடிகளை இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி இணைக்குக.

1. கமல் நன்றாகப் பாடங்களைப் படித்தான்.
   கமல் பரீட்சையில் சித்தியடையவில்லை.
   ……………………………………………………………………………………
2. நாட்டில் ஊரடங்கு அமுலில் உள்ளது.
   மக்களுக்கு உணவு தட்டுப்பாடின்றிக் கிடைக்கிறது.
   ……………………………………………………………………………………
3. ரதி நடனம் ஆடினாள்
   ராதை நடனம் ஆடினாள்
   ……………………………………………………………………………………
4. மாணவர்கள் நன்றாகப் படித்தனர்
   பரீட்சையில் நல்ல பெறுபேறு பெற்றனர்
   ……………………………………………………………………………………
5. நான் தினமும் ஒவ்வொரு பழம் உண்கிறேன்.
   பழங்கள் உண்பது உடலுக்கு நன்மையாகும்
   ………………………………,………………………………………………

## மரபுப் பெயர்கள்

### I பின்வருவனவற்றின் இளமைப் பெயர்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. பனை | :- | 6. பருந்து | :- |
| 2. நெல் | :- | 7. யானை | :- |
| 3. பலா | :- | 8. அணில் | :- |
| 4. சிங்கம் | :- | 9. மீன் | :- |
| 5. தவளை | :- | 10. கோழி | :- |

### II பின்வருவனவற்றின் தொனிகளைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. நரி | :- | 4. ஆந்தை | :- |
| 2. காகம் | :- | 5. எருமை | :- |
| 3. புறா | :- | 6. பாம்பு | :- |

7. தேவாங்கு :-
8. பன்றி :-
9. குரங்கு :-
10. யானை :-

## III கூட்டத்தைக் குறிக்கும் சொற்களை இணைக்குக.

| | |
|---|---|
| 1. கல் | கணம் |
| 2. மலர் | நிரை |
| 3. பூதம் | சிப்பம் |
| 4. மலை | செண்டு |
| 5. புகையிலை | குவியல் |
| 6. ஓளி | குழாம் |
| 7. மயில் | தொடர் |
| 8. பசு | கற்றை |

## அலகு14
## உயிர் இரக்கம்

**I. " உயிர் இரக்கம் " என்ற கட்டுரையை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. உயிர் இரக்கம் என்ற கட்டுரையை எழுதியவர் யார்?
………………………………………………………………………………………
2. உலகில் உயிர்களின் தோற்றத்திற்கான அடிப்படை எது?
………………………………………………………………………………………
3. ''ஒன்றறிவதுவே உற்றறி வதுவே'' என்று கூறும் நூல் எது?
………………………………………………………………………………………
4. ''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என்று கூறியவர் யார்?
………………………………………………………………………………………
5. பசுவின் கன்றினுக்காக தன் மகனை தேர்க்காலில் இட்டு தண்டனை வழங்கிய மன்னன் யார?
………………………………………………………………………………………
6. சிபிச் சக்கரவர்த்தியின் உயிர் நேயம் எவ்வாறு வெளிப்பட்டது?
………………………………………………………………………………………
7. மயிலுக்கு போர்வை கொடுத்த மன்னன் யார்?
………………………………………………………………………………………
8. பறம்பு மலையை ஆண்ட குறுநில மன்னன் யார்?
………………………………………………………………………………………
9. பாரி மன்னனது கருணை உள்ளம் எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது?
………………………………………………………………………………………
10. மணியின் நாவை அசையாது இழுத்துக்கட்டும்படி தேர்ப்பாகனைத் தலைவன் பணிக்கக் காரணம் யாது?
………………………………………………………………………………………

## II பின்வரும் கடவுளர்களின் வாகனங்களைக் குறிப்பிடுக.

1. தேவேந்திரன் :-
2. சிவன் :-
3. திருமால் :-
4. முருகன் :-
5. காளி :-
6. ஐயனார் :-
7. பிள்ளையார் :-
8. ஐயப்பன் :-
9. வைரவர் :-
10. சனீஸ்வரன் :-
11. இயமன் :-

**III பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துள்ள சொற்களைத் தருக.**

1. புராதனம் :-
2. ஓம்புதல் :-
3. இரக்கம் :-
4. வாட்டம் :-
5. நேயம் :-
6. ஓடை :-
7. ஆணை :-
8. விருட்சம் :-
9. பரிணாமம் :-
10. சக்கரம் :-

**IV பின்வரும் வாக்கியங்களிலுள்ள அடைமொழிகளை இனங்கண்டு எழுதுக.**

1. வெள்ளைக் கொக்கு ஓடையில் மீனைக் கொத்தித் தின்றது.
   ……………………………….
2. அமைதியான மனிதர்கள் இளமையாக வாழ்கிறார்கள்.
   ……………………………..……
3. குள்ள நரியொன்று காட்டில் அலைந்து திரிநதது.
   ………………………….………
4. பூஞ்சோலையில் தென்றற் காற்று சில்லென வீசியது.
   ……………………………….…
5. காயசண்டிகை (யானைத்தீ) எனும் கொடும் பசியினால் பீடிக்கப்பட்டாள்
   ………………………………………

**திசைச் சொற்கள்**

| |
|---|
| தமிழில் வழங்கி வரும் வடமொழி அல்லாத ஏனைய திசைகளிலிருந்து வந்த சொற்களே திசைச் சொற்கள் ஆகும். |

**I. பின்வரும் திசைச் சொற்கள் எம்மொழிக்குரியன என குறிப்பிடுக.**

1. ஜன்னல் -
2. கந்தோர் -
3. தகவல் -
4. இலஞ்சம் -
5. துட்டு -
6. குசினி -
7. அக்கறை -
8. சந்தடி -
9. அட்டிகை -
10. இடாப்பு -

**II பின்வரும் திசைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை இணைக்குக.**

| | |
|---|---|
| 1. இலாகா | கவனம் |
| 2. அலுமாரி | கழுத்தணி |
| 3. சைத்தான் | திணைக்களம் |
| 4. உலாந்தா | பேரேடு |
| 5. சக்கடத்தார் | சேகரிப்பு |
| 6. அக்கறை | பிசாசு |
| 7. இலாந்தர் | நிலைப்பேழை |
| 8. இடாப்பு | அளவைக்காரன் |
| 9. அட்டிகை | கண்ணாடி விளக்கு |
| 10. வசூல் | செயலாளர் |

# வேற்றுமை

மாலா வந்தாள்
மாலாவைக் கண்டேன்.
மாலாவினால் செய்யப்பட்டது.
மாலாவிற்குக் கொடுத்தேன்
மாலாவின் புத்தகம்
மாலாவினது கை
மாலாவிடம் உள்ளது.
மாலா , வா

மேற்கூறப்பட்ட வாக்கியங்கள் வெவ்வேறு கருத்தை வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு ஒரு பெயர்ச்சொல் வெவ்வேறு உருபுகளை ஏற்று வேறுபட்டு வருவதனையே வேற்றுமை என்போம்.

> வேற்றுமை என்பது வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணத் தொழிற்பாடு வேறுபட்டு வருவது ஆகும்.

- பெயர்ச்சொற்களின் சிறப்பு இலக்கணம் வேற்றுமை உருபுகளை ஏற்பதாகும்.
- வேற்றுமை உருபுகளாவன :- ஐ, ஆல், கு, இன், அது, கண் முதலானவற்றைக் குறிப்பிடலாம்
- தமிழில் 8 வகையான வேற்றுமை உண்டு என பழந்தமிழிலக்கணகாரர் கூறுவர்.

**வேற்றுமை அட்டவணை**

| **வேற்றுமை** | **உருபு** | **சொல்லுருபு** | **பொருள்** | **உதாரணம்** |
|---|---|---|---|---|
| முதலாம் வேற்றுமை | இல்லை | ஆனவன்<br>என்பவன்<br>ஆகின்றவன் | எழுவாய்ப்பொருள் | மரம் உயரமாக வளர்ந்திருக்கிறது |
| இரண்டாம் வேற்றுமை | ஐ | - | செயப்படுபொருள்<br>1. ஆக்கல்<br>2. அழித்தல்<br>3. அடைதல்<br>4. நீத்தல்<br>5. ஒத்தல்<br>6. உடைமை | 1.பாலன் வீட்டைக் கட்டினன்.<br>2.மாணவன் கதிரையை உடைத்தான்.<br>3.நான் பாடசாலையை அடைந்தேன்<br>4.நான் ஊரை நீங்கினேன்.<br>5.குமார் புலியைப் போலப் பாய்ந்தான்.<br>6.பொன்னன் நிறைய சொத்துக்களை வைத்திருக்கிறான் |
| மூன்றாம் வேற்றுமை | ஆல்<br>ஆன்<br>ஒடு<br>ஓடு | கொண்டு<br>மூலம்<br><br>உடன் | கருவிப் பொருள்<br>கருத்தாப்பொருள்<br><br>உடனிகழ்ச்சிப்பொருள் | 1.ரவி கத்தியால் வெட்டினான்.<br>2.திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.<br>3.தந்தையோடு மகன் சென்றான். |

| | | | | |
|---|---|---|---|---|
| நான்காம் வேற்றுமை | கு | ஆக<br>பொருட்டு<br>நிமித்தம் | 1.கொடை<br>2.பகை<br>3.நட்பு<br>4.தகுதி<br>5.உறவு<br>6.முதற்காரணம்<br>7.நிமித்தகாரணம் | 1.மாணவனுக்கு பரிசு கொடுத்தார்<br>2.கீரிக்கு பகை பாம்பு<br>3.இராமனுக்கு நண்பன் குகன்<br>4.அரசனுக்கு உரியது முடி<br>5.தசரதனுக்கு மகன் இராமன்<br>6.பிட்டுக்கு மா குழைத்தாள்<br>7.கூலிக்கு வேலை செய்தான் |
| ஐந்தாம் வேற்றுமை | இல்<br>இன் | நின்று<br>இருந்து<br>விட | நீங்கல்<br>எல்லை<br>ஒப்பு<br>ஏது | 1.தம்பி ஊரிலிருந்து நீங்கினான்<br>2.இந்தியாவின் தெற்கே இலங்கை உள்ளது |
| ஆறாம் வேற்றுமை | அது<br>ஆது | உடைய | உடைமைப் பொருள் (கிழமைப் பொருள்)<br>1. தற்கிழமை<br>2. பிறிதின்கிழமை | 1.ராதாவினது கண்<br>2.எனது புத்தகம் |
| ஏழாம் வேற்றுமை | கண்<br>இல்<br>உள் | - | இடப்பொருள் | மலைக்கண் கோயில் உள்ளது. |
| எட்டாம் வேற்றுமை | - | - | விளிப்பொருள் | கண்ணா வா |

**மேற்காட்டப்பட்டுள்ளஅட்டவணையைப் பயன்படுத்திப் பின்வரும் வாக்கியங்களிலுள்ள வேற்றுமையை இனங்கண்டு வேற்றுமை உருபுகளையும் பொருள்களையும் இனங்கண்டு கூறுக.**

1. கிராமத்தினது அழகு அற்புதமானது.
   ……………………………….
   ……………………………….
2. சுமன் கூலிக்கு வேலை செய்து வந்தான்
   …………………………..
   ……………………………..
3. மாதவி நண்பியோடு சென்றாள்
   ……………………………….
   ………………………………..
4. அம்மா குழந்தைக்காக பால் வாங்கினாள்
   ……………………….
   ………………………..
5. சேது வீட்டை இடித்தான்
   ……………………………..
   ……………………………..

# அழைப்பிதழ்

விழாக்கள், நிகழ்வுகள், என்பவற்றுக்கு விருந்தினர்களை அழைத்து அழைப்பிதழ் அனுப்புகின்றோம். திருமண நிகழ்வு புதுமனைப் புகுவிழா நிகழ்வு பூப்புனித நீராட்டு விழா நிகழ்வு, பாடசாலை விளையாட்டுப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்வுகளுக்கு அழைப்பிதழ்களை அனுப்புகின்றோம்.

**மாதிரி அழைப்பிதழ்**

**புதுமனைப் புகுவிழா அழைப்பிதழ்**

திரு / திருமதி / செல்வி ........................................................................................... அவர்களுக்கு

அன்புடையீர்,

நிகழும் சார்வரி வருடம் வைகாசித் திங்கள் 31ஆம் நாள் (15-06-2020) திங்கட்கிழமை சுபநேரம் 12.06 தொடக்கம் 1.20 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

இல.44/8 அரசடி வீதி, தெல்லிப்பளை எனும் முகவரியில் அமையப்பெற்றுள்ள ''வதன பவனம்'' என்ற எமது புதிய மனையில் குடிபுகத் திருவருள் கைகூடியுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து சிறப்பிப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு அன்போடு அழைக்கின்றோம்.

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்

01-04-2020 திரு. திருமதி கைலாசபதி குடும்பத்தினர்

**பயிற்சி**

1. அழைப்பிதழ் அனுப்ப வேண்டிய நிகழ்வுகள் சில தருக.
2. அழைப்பிதழ்களில் இடம்பெறுபவை எவை?
3. பிறந்தநாள் வைபவம் தொடர்பான அழைப்பிதழ் ஒன்று எழுதுக.

## பின்வரும் பெயர்ச்சொற்கள் காரணப் பெயரா, இடுகுறிப் பெயரா?, காரணப் இடுகுறிப் பெயரா? என அட்டவணையில் காட்டுக.

1. நாற்காலி
2. மரம்
3. முள்ளி
4. அணி
5. கணக்காளன்
6. நிலம்
7. தளபாடம்
8. புத்தகம்
9. முக்கண்ணன்
10. மீன்கொத்தி

| காரணப் பெயர் | இடுகுறிப் பெயர் | காரண இடுகுறிப் பெயர் |
|---|---|---|
| | | |

## பின்வரும் தலைப்புக்களுள் ஒன்றைத் தெரிவு செய்து கட்டுரை எழுதுக.

1. உடைந்த நிலையில் கிடக்கும் பழைய நூலகத்தின் சுயசரிதை
2. காலைநேரக் கடற்கலைக் காட்சி
3. விஞ்ஞானத்தின் விந்தை
4. காடு அழித்தலினால் ஏற்படும் விளைவுகள்

**ஐந்தின் மகிமை**

| | | |
|---|---|---|
| 1. ஐவகை நிலம் | : | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை |
| 2. ஐம்பொறிகள் | : | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| 3. ஐங்குரவர் | : | தாய், தந்தை, குரு, அரசன், தமையன் |
| 4. ஐம்புலன்கள் | : | சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் |
| 5. ஐம்பூதம் | : | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் |
| 6. ஐவகை வர்ணங்கள் | : | வெண்மை, கருமை, செம்மை, பொன்மை, பசுமை |
| 7. ஐம்பெரும் பாதகங்கள் | : | கொலை, பொய், களவு, சூது, விபச்சாரம் |
| 8. ஐவகை இசைக்கருவிகள் | : | தோல், துளை, பிடறு, நரம்பு, கஞ்சல் |
| 9. ஐவகைத் தொழில் | : | படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் |

**சொல்லின் இசை**

1. சொல்லின் இசை என்னும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
2. இப்பாடப் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள் எவை?
3. தெலுங்கு எனப் பெயர் வரக் காரணம் யாது எனக் கட்டுரையில் குறிப்பிடப்படுகிறது?
4. இக்கட்டுரையில் இசையின் முக்கியத்துவம் எவ்விதம் காட்டப்படுகின்றது.
5. இலக்கணத்தில் சாரியைகள் அமைக்கப்பட்டது எதற்காக என கூறப்படுகிறது?

**வாக்கியத்தின் அமைப்பு**

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றோடு அடைமொழிகளும் வாக்கியத்தில் இடம்பெறும்.

உதாரணம் : பள்ளி மாணவர்கள் இனிய இசையுடன் இனிமையாகப் பாடினார்கள்

| | | |
|---|---|---|
| எழுவாய் | - | மாணவர்கள் |
| எழுவாய் அடைமொழி | - | பள்ளி |
| பயனிலை | - | பாடினார்கள் |
| பயனிலை அடைமொழி | - | இனிமையாக |
| செயப்படுபொருள் | - | பாடல்களை |
| செயப்படுபொருள் அடைமொழி | - | இனிய |

➢ **பின்வரும் வாக்கியங்களின் உறுப்புக்களை இனங்கண்டு கீழேயுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

1. கள்ளப் பூனை வெள்ளைப் பாலை விரைந்து குடித்தது
2. கெட்டிக்காரப் பிள்ளை கடின பாடத்தை நுட்பமாக முடித்தாள்.
3. எமது பாடசாலையில் பெரிய நூலகம் உள்ளது.
4. உயர்தர மாணவர்கள் இனிய கவிதைகளை இயற்றி எழுதினார்கள்.

| எழுவாய் அடைமொழி | எழுவாய் | செயப்படு அடைமொழி | செயப்படு பொருள் | பயனிலை அடைமொழி | பயனிலை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**திரிசொல்**

அரிதாகப் பொருள் உணர்த்தும் சொல் திரிசொல் எனப்படும்.
இது ஒரு பொருள் குறித்த பல சொல்லாகியும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் வரும்.

**ஒரு பொருள் குறித்த பல சொல்**

1. மன்னன் - அரசன், வேந்தன், கோ
2. குற்றம் - ஆசு, கசடு, மாசு, களங்கம்
3. நண்பன் - சிநேகிதன், தோழன், பாங்கன், துணைவன்
4. குழந்தை - மகவு, சிசு, சேய், குழவி

**பயிற்சி**

**பின்வரும் சொற்களைக் குறிக்க வழங்கும் வேறு நான்கு சொற்கள் தருக.**

1. புத்தகம் :
2. யாக்கை :
3. அழகு :
4. ஆசான் :
5. உறவு :
6. ஒளி :
7. பகைவர் :
8. பூங்கா :
9. வானம் :
10. வயல் :

➢ **பின்வரும் சொற்கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சொல் வேறுபட்டது. அச்சொல்லினைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.**

1. குழந்தை, சேய், மகவு, சிசு, மாதா
2. நேசம், அன்பு, பரிவு, ஈரம், வன்பு
3. கழல், கால், பாதம், அடி, முடி
4. அல்லல், இடர், நல்குரவு, இடும்மை, இன்னல்
5. நீதி, அநீதி, தருமம், நெறி, நியாயம்

## திரிசொல் II

**பலபொருள் குறித்த ஒரு சொல் :**

பார் : பூமி, பார்த்தல், அடுக்கு, கற்பாறை, நிலம்
கவி : குரங்கு, கவிஞன், பாட்டு, ஆசு, சித்திரம்
பதி : இடம், அரசன், கணவன், இறைவன், வீடு

➢ **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள சொல் உணர்த்தும் பொருளைத் தெரிவு செய்து கோடிடுக.**

1. **அரவம்** தீண்டி லோகிதாசன் இறந்தான்
   1. பாம்பு 2. யானை 3. சத்தம் 4. மேகம்
2. பெண்களுக்குத் தம் **பதி**யே தெய்வம்
   1. இடம் 2. இறைவன் 3. கணவன் 4. வீடு
3. மதம் கொண்ட **கரி** நாட்டிற்குள் புகுந்தது
   1. கருமை 2. யானை 3. பாம்பு 4. இருள்
4. துரியோதன்ன **பணிக்** கொடியை உடையவன்
   1. தொண்டு 2. கட்டளை 3. பாம்பு 4. ஈகை
5. அரசர் செயற்கை **அரண்** அமைத்து போரிட்டனர்
   1. அழகு 2. மதில் 3. அரண்மனை 4. வீடு

**பயிற்சி**

**பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.**

1. மரக்கிளை -
2. மந்தியினம் -
3. அறநெறி -
4. பொற்கொல்லன் -
5. கலப்புணர்ந்தான் -
6. பரிசேற்றான் -
7. நீர்த்தொட்டி -
8. எனவுரைத்தான் -
9. வீதியெல்லாம் -
10. பேரரசன் -

**சேர்த்தெழுதுக**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மேல் + உதைப்பு | - | 6. | காவடி + ஆட்டம் | - |
| 2. | உயர் + கல்வி | - | 7. | பூ + சோலை | - |
| 3. | குளிர் + காய்ச்சல் | - | 8. | ஆர்வம் + உடைய | - |
| 4. | இவை + எல்லாம் | - | 9. | பொன் + எடுத்து | - |
| 5. | எறிந்து + உடைக்க | - | 10. | வாழ்வோர்க்கு + எல்லாம் | - |

## அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. அவன் மாங் (கனியை, கணியை)ச் சாப்பிட்டான்.
2. அண்ணா குளிர்ந்த (பாணம், பானம்) அருந்தினான்
3. கண்மணி அழகிய மாலை (புனைந்தாள், புணைந்தாள்)
4. சிறுவர்கள் (வாணத்தில், வானத்தில்) பட்டம் விட்டார்கள்.
5. சைவமக்கள் வெள்ளிக்கிழமைகளில் (ஊன், ஊண்) சாப்பிடமாட்டார்கள்.
6. ஆசிரியர்களைக் (கனம், கணம்) பண்ண வேண்டும்.
7. புற்களில் (பனி, பணி) அழகு.
8. கடலில் (அலை, அளை) மோதியது.
9. கடற் (கறை, கரை)யில் விளையாடினோம்.
10. சிற்பி (சிலை, சிளை) செதுக்கினான்.

## பிராணிகளின் இளமைப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாய் | - | குட்டி, குருளை | 12. | கீரி | - | பிள்ளை |
| 2. | சிங்கம் | - | குருளை | 13. | காகம் | - | குஞ்சு |
| 3. | புனை | - | குட்டி, பறள் | 14. | கோழி | - | குஞ்சு |
| 4. | குரங்கு | - | பறள், குட்டி | 15. | தவளை | - | பேத்தை, குஞ்சு |
| 5. | ஆடு | - | குட்டி | 16. | மீன் | - | குஞ்சு |
| 6. | புலி | - | குட்டி | 17. | எலி | - | குஞ்சு |
| 7. | குதிரை | - | குட்டி | 18. | மான் | - | குட்டி, கன்று |
| 8. | பாம்பு | - | குட்டி | 19. | பசு | - | கன்று |
| 9. | கிளி | - | குஞ்சு, பிள்ளை | 20. | யானை | - | போதகம்/கன்று/குட்டி |
| 10. | அணில் | - | குஞ்சு, பிள்ளை | | | | |
| 11. | ஆமை | - | குஞ்சு | | | | |

## தாவரங்களின் இளமைப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மா | - | கன்று | 7. | கமுகு | - | பிள்ளை,கன்று |
| 2. | பலா | - | கன்று | 8. | தென்னை | - | பிள்ளை |
| 3. | வாழை | - | கன்று,குட்டி | 9. | பனை | - | வடலி |
| 4. | மூங்கில் | - | கன்று | 10. | நெல் | - | நாற்று |
| 5. | வேம்பு | - | கன்று | 11. | புகையிலை | - | நாற்று |
| 6. | எலுமிச்சை | - | கன்று | | | | |

## ஆண், பெண் மரபுப் பெயர்கள்

| | **உயிரினம்** | **ஆண்** | **பெண்** |
|---|---|---|---|
| 01. | பூனை | கடுவன் | பெட்டை |
| 02. | நாய் | கடுவன் | பெட்டை |
| 03. | குரங்கு | கடுவன் | மந்தி |
| 04. | மயில் | போத்து | அளகு |
| 05. | புலி | போத்து | பிணா |
| 06. | மான் | கலை | பிணை |
| 07. | யானை | களிறு | பிடி |
| 08. | சிங்கம் | ஏறு | பெட்டை |
| 09. | கோழி | சேவல் | பேடு, பெட்டை |
| 10. | நண்டு | அலவன் | பெட்டை, பெடை |

| | | | |
|---|---|---|---|
| 11. | குதிரை | குண்டு | வடவை, பெட்டை |
| 12. | ஆடு | கடா | மறி |
| 13. | நரி | ஓரி | பாட்டி |
| 14. | மாடு | ஏறு, காளை, எருது | நாகு, பசு |

## பிஞ்சு மரபுப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வெண்டி | - | பிஞ்சு | 5. | பனை | - | நுங்கு |
| 2. | கத்தரி | - | பிஞ்சு | 6. | தென்னை | - | குரும்பை |
| 3. | பூசணி | - | பிஞ்சு | 7. | வாழை | - | கச்சல் |
| 4. | மா | - | வடு | 8. | பலா | - | மூசு |

## பிராணிகளின் மலங்களின் மரபுப் பெயர்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஒட்டகம் | - | இலத்தி, இலண்டம் | 6. | கழுதை | - | விட்டை |
| 2. | யானை | - | இலத்தி, இலண்டம் | 7. | எருது | - | சாணம் |
| 3. | குதிரை | - | இலத்தி, இலண்டம் | 8. | மாடு | - | சாணம் |
| 4. | பறவை | - | எச்சம் | 9. | எலி | - | பிழுக்கை |
| 5. | ஆடு | - | பிழுக்கை | 10. | முயல் | - | பிழுக்கை |

## தொனிகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | மயில் | - | அகவும் | 18. | அணில் | - | கீச்சிடும் |
| 02. | பூனை | - | கத்தும் | 19. | ஆந்தை | - | அலறும் |
| 03. | வானம்பாடி- | | பாடும் | 20. | குரங்கு | - | அலப்பும் |
| 04. | தேனி | - | ரீங்காரம் செய்யும் | 21. | தேவாங்கு | - | அழும் |
| 05. | புறா | - | குறுகுறுக்கும் | 22. | புலி | - | உறுமும் |
| 06. | சிங்கம் | - | கர்ச்சிக்கும் | 23. | குதிரை | - | கனைக்கும் |
| 07. | குயில் | - | கூவும் | 24. | பல்லி | - | சொல்லும் |
| 08. | குருவி | - | கீச்சிடும் | 25. | எருமை | - | எக்காளமிடும் |
| 09. | ஆடு | - | கத்தும் | 26. | காகம் | - | கரையும் |
| 10. | எலி | - | கீச்சிடும் | 27. | கழுதை | - | கத்தும் |
| 11. | யானை | - | பிளிறும் | 28. | ஓநாய் | - | ஊளையிடும் |
| 12. | கழுதை | - | கத்தும் | 29. | கரடி | - | உறுமும் |
| 13. | பசு | - | கதறும் | 30. | பன்றி | - | உறுமும் |
| 14. | பாம்பு | - | சீறும் | 31. | தவளை | - | கத்தும் |
| 15. | கோழி | - | கொக்கரிக்கும் | 32. | நரி | - | ஊளையிடும் |
| 16. | சேவல் | - | கூவும் | 33. | வண்டு | - | இரையும் |
| 17. | நாய் | - | குரைக்கும் | | | | |